**MCOP:** 19/2022

Date: 17.03.2025.

ம.சா.1 சகாதேவன், த/பெ. காளையாண்டி (வயது 60)

<u>**சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜரானார். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :–**</u>

1.நான் தாக்கல் செய்துள்ள சீர்திருத்தப்பட்ட எனது மனுவில் கூறப்பட்டுள்ள விவரங்கள் என்னை பொறுத்தவரையில் உண்மையானவை என்றால் சரிதான். விபத்தில் ஈடுபட்ட வாகனம் 2 இன்சூரன்ஸ் கம்பெனிகளில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வயது மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய எந்த ஒரு ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதைப்போன்று விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவு காரணமாக ஏற்படவில்லை என்றும் நாங்கள் கவனக்குறைவாக சாலையை கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் மாதம் ரூ.12000/– சம்பாதித்து வந்ததாகவும் எனது வயது 60 என்றும் நிரந்தர ஊனம் எனக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ள விவரங்கள் உண்மைக்கு மாறானவை என்றால் சரியல்ல.

2.வேலுச்சாமி என்பவரது 3 மாடுகளுக்கு காயம் ஏற்பட்டதாக கூறியிருப்பதும் உண்மைக்கு மாறானவை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கோரியுள்ள இழப்பீடு தொகைகள் அதிகபட்சமானது என்றும் அவை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2,ம் எதிர்மனுதாரரைபொறுத்து இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு ஏதேனும் இழப்பீடு

தொகை கிடைக்கத்தக்கது என்றால் 2,3 எதிர்மனுதாரர்கள் சேர்ந்துதான் சரிசம விகிதாச்சாரப்படி வழங்கவேண்டும் என்றால் சரியல்ல.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

1.என்மீது மோதிய பேருந்து எந்த காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்படடுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை:-** இல்லை

ஒம்/-P.V.வஷீத்குமார்,
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**